DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | SC.No.65/2016 |
| Deposition of Witness for | : | PW.12 |
| Name | : | **மருத்துவர்.ராஜகோபால்** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

**(வழக்கின் எதிரிகள் 2, 5, 7, மற்றும் 9 ஆஜர். 1, 3, 4, 6, 8, 10, 11 மற்றும் 12-ம் எதிரிகள் ஆஜர் இல்லை. 1, 3, 4, 6, 8, 10, 11 மற்றும் 12-ம் எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 12.03.2026

அரசுதரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் பேரில் சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை:</u> (காணொளி வாயிலாக சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது)**

1. நான் தற்போது மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் பல் மருத்துவ துறையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.01.2015 தேதி நான் மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் பணியிலிருந்தபோது 60 வயது மதிக்கத்தக்க ராஜேஸ்வரி என்பவர் உள்நோயாளியாக இருந்தார். அவரை நான் பரிசோதனை செய்தபோது மேல் தாடையில் உள்ள இரண்டு முன்பற்கள் ஆடிக்கொண்டிருந்தது. கீழ் தாடையில் இடதுபக்கமுள்ள முன் பல் கீழே விழுந்திருந்தது. காயம்பட்ட ராஜேஸ்வரி என்பவர் 28.01.2015 சிகிச்சையிலிருந்து

விடுவிக்கப்பட்டுள்ளார். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயங்கள் என்று நான் சான்று வழங்கினேன். அந்த **காயச்சான்றிதழ் அ.த.சா.ஆ.17** ஆகும்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

இந்த வழக்கு சம்மந்தமாக காவல்துறை அதிகாரிகள் நேரடியாக விசாரித்து வாக்குமூலம் பெற்றார்களா என்றால் ஆமாம். எந்த தேதியில் எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் தேதி ஞாபகமில்லை மருத்துவமனையில் வைத்து என்னை விசாரித்தார்கள். காயம்பட்ட நபருக்கு ஏற்பட்ட காயங்களானது கூட்ட நெரிசலில் தடுமாறி விழுந்தால் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. காயம்பட்ட நபரை நான் சிகிச்சைக்கு அனுமதித்தேனா என்றால் இல்லை. மேற்படி காயங்கள் நான் பரிசோதனை செய்வதற்கு இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு முன்னால் ஏற்பட வாய்ப்புண்டா என்றால் இல்லை. மேற்படி காயங்கள் எத்தனை மணி நேரத்திற்கு முன்பாக ஏற்பட்டிருக்க வாய்ப்புண்டு என்று என்னால் குறிப்பிட்டு கூற இயலுமா என்றால் இயலாது.

**மறு விசாரணை:** இல்லை

N SENTHIL MURALI
Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.03.12 17:48:56 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர் ,**

**சிவகங்கை.**